


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2024) தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயர் சூட்டி சிறப்பு செய்ததற்காக, நாகூர் ஹனிபாவின் மகன்கள் நாசர் மற்றும் நவ்சாத், மகள் திருமதி ஜரினா பேகம், மருமகன் சாகுல் அமீது மற்றும் அவர்களது குடும்பத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. முகம்மது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன், நாகப்பட்டினம் நகரமன்றத் தலைவர் இரா.மாரிமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை – மயிலை பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி மற்றும் சாந்தோம் பேராலயத்தின் பங்குத்தந்தை வின்சென்ட் சின்னதுரை ஆகியோர் சந்தித்த போது, அவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் கிறிஸ்துமஸ் வாழ்த்துகளை தெரிவித்தார்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2024) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அவர்கள் சந்தித்து, சென்னை பாலன் இல்லத்தில் 26.12.2024 அன்று நடைபெறவுள்ள விடுதலை போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா. நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில துணைச் செயலாளர்கள் மு. வீரபாண்டியன், நா. பெரியசாமி ஆகியோர் உள்ளனர்.




பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், செட்டிநாடு வித்தியாஸ்ரமம், குமார ராஜா முத்தையா அரங்கத்தில் நேற்று (21.12.2024) நடைபெற்ற பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சங்க கூட்டத்தில் பங்குபெற்று செய்தி மடலினை வெளியிட்டார்.

### நாகையில் இ.எம்.ஹனிபா இல்லம் அமைந்துள்ள தெருவிற்கு

# “இசை முரசு நாகூர் இ.எம்.ஹனிபா தெரு” என பெயர் சூட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 22 –**

**“இசை முரசு” நாகூர் ஹனிபா அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு அவரை சிறப்பிக்கும் வகையில், நாகப்பட்டினம் நகராட்சியில் அவர் இல்லம் அமைந்துள்ள தெருவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் பூங்கா “இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயர் சூட்டவும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.**

நாகூர் ஹனிபா அவர்கள் இல்லம் அமைந்துள்ள தெருவிற்கும், புதுப்பிக்கப்பட்ட பூங்காவிற்கும் அவரது பெயர் சூட்டி சிறப்பு செய்ததற்கு நாகூர் ஹனிபா அவர்களின் குடும்பத்தினர் நேரில் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

நாகூர் ஹனிபா என்று அனைவராலும் அன்போடு அழைக்கப்படும் இஸ்மாயில் முகமது ஹனிபா அவர்கள், 1925ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் நாள் இராமநாதபுரம் மாவட்டம், வெளிப்பட்டினத்தில் முகமது இஸ்மாயில் – திருமதி மரியம் பீவி தம்பதியருக்கு மூன்றாவது மகனாக பிறந்தார். இவரது தந்தை முகமது இஸ்மாயில் அவர்கள் நாகூரை பூர்வீகமாக கொண்டவர் என்பதால் முகமது ஹனிபா அவர்கள் நாகூர் இ.எம். ஹனிபா என்று அழைக்கப்பட்டார்.

இயற்கையிலேயே இசை ஞானம் கொண்டிருந்த நாகூர் ஹனிபா அவர்கள் தனது 15வது வயதிலிருந்தே திருமண நிகழ்வுகளில் இசைக் கச்சேரிகள் நடத்தத் தொடங்கினார். தனது தனித்துவமான குரல் வளத்தாலும், பாடல் திறத்தாலும் உலகெங்கிலும் அவருக்கு இலட்சக்கணக்கான ரசிகர்கள் உருவாகினர். நாகூர் ஹனிபா அவர்கள் நூற்றுக்கணக் கான இஸ்லாமியப் பாடல்களையும், இயக்கப் பாடல்கள் மற்றும் இதர பாடல்களையும் பாடி பெரும் புகழ்பெற்றவர்.

**மிகப் பிரபலமான பாடல்களை பாடியவர்!**

1953ம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திரைக்கதையில் வெளியான ‘நாம்’ படத்தில் நாட்டுக்கூத்துப் பாணியில் இயற்றப்பட்ட பலர் சேர்ந்து பாடிய ஒரு பாடலில் நாகூர் ஹனிபா அவர்களும் இணைந்து பாடினார். இதுவே அவரது முதலாவது திரையுலகப் பாடலாகும். இதை தொடர்ந்து பல படங்களில் பாடல்களை பாடியுள்ளார். ‘இறைவனிடம் கையேந்துங்கள்’, ‘எல்லோரும் கொண்டாடுவோம்’, ‘நட்ட நடு கடல் மீது’, ‘உன் மதமா என் மதமா’, ‘அழைக்கின்றார் அண்ணா’, ‘ஒடி வருகிறான் உதயசூரியன்’ போன்ற பாடல்கள் மிகப் பிரபலமானவை ஆகும்.

**முத்தமிழறிஞர் கலைஞர் புகழ்மாலை!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், நாகூர் ஹனிபா அவர்களை குறிப்பிட்டு சொல்லும் போது, “ஹனி” என்றால் தேன், “பா” என்றால் பாட்டு, ஹனிபாவின் பாட்டு தேனாக இனிக்கிறது என்றும், எனவே அவருக்கு ஹனிபா என்று பெயர் வைத்தவர்களை பாராட்ட வேண்டும்” என்று புகழ்ந்து பேசியுள்ளார்.

நாகூர் ஹனிபா அவர்களின் இசைப் பங்களிப்பைப் பாராட்டி தமிழறிஞர் சண்முக தேசிகர் அவர்கள் “இசை முரசு” என்ற பட்டத்தை வழங்கினார். நாகூர் ஹனிபா அவர்கள் Golden Voice from India என்று சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் Straits Times பத்திரிகையால் பாராட்டப் பெற்றவர்.

சுயமரியாதை இயக்கத் தொண்டராய், இந்தி எதிர்ப்புப் போராட்ட வீரராய் தம் அரசியல் வாழ்வைத் தொடங்கிய நாகூர் ஹனிபா அவர்கள், நீதிக்கட்சி, திராவிட இயக்கங்களின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். பட்டுக்கோட்டை அழகிரி, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கண்ணியத்த லைவர் காயிதே மில்லத் ஆகியோரது அன்பையும் பெற்றவர்.

**எளிமையாக வாழ்ந்தவர்!**

ஹனிபா என்ற அரபிச் சொல்லுக்கு நேர்மையானவர் என்று பொருள். பெயருக்கு ஏற்ப நேர்மையின் இலக்கணமாக வாழ்ந்து காட்டியவர் நாகூர் ஹனிபா அவர்கள். ஆடம்பரம் விரும்பாமல் எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தவர்.

“இசை முரசு” நாகூர் ஹனிபா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழ்நாடு வக்பு வாரிய தலைவராகவும் மக்கள்பணியாற்றியவர். கம்பீரமான குரல் வளத்தால் அனைவரையும் கவர்ந்து புகழ்பெற்ற நாகூர் ஹனிபா அவர்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்து 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் நாள் மறைந்தார்.

**நூற்றாண்டு நினைவுப் பூங்கா!**

தமிழ் இசைக்கும், திரை இசைக்கும் சுமார் 75 ஆண்டுகள் தொண்டாற்றிய நாகூர் இ.எம்.ஹனிபா அவர்களின் பங்களிப்பைப் போற்றி பெருமை சேர்க்கும் வகையில், நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம்.ஹனிபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம்.ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயரிட்டு அழைக்க முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

நாகப்பட்டினம் நகராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நாகூர் தைக்கால் தெருவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா தெரு” என்றும், சில்லடி கடற்கரைக்குச் செல்லும் சாலையில் புதுப்பிக்கப்படும் சிறுவர் விளையாட்டுப் பூங்காவிற்கு “இசை முரசு நாகூர் இ.எம். ஹனிபா நூற்றாண்டு நினைவுப் பூங்கா” என்றும் பெயர் சூட்டி சிறப்பு செய்ததற்காக, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (21.12.2024) தலைமைச் செயலகத்தில், நாகூர் ஹனிபா அவர்களின் மகன்கள் நாசர் மற்றும் நவ்சாத், மகள் திருமதி ஜரினா பேகம், மருமகன் சாகுல் அமீது மற்றும் அவர்களது குடும்பத்தினர் சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாகப்பட்டினம் சட்டமன்ற உறுப்பினர் ஜெ. முகம்மது ஷா நவாஸ், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் ந.கௌதமன், நாகப்பட்டினம் நகரமன்றத் தலைவர் இரா.மாரிமுத்து ஆகியோர் உடனிருந்தனர்.

### துறையினை மென்மேலும் வலுப்படுத்தி, வளர்ச்சியடைய

# ஆக்கப்பூர்வமான கருத்துக்களை உருவாக்க வேண்டும்!

## பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சங்கக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு வலியுறுத்தல்!

சென்னை, டிச. 22-

“பொதுப்பணித்துறையினை மென்மேலும் வலுப்படுத்தி வளர்ச்சியடைய ஆக்கப்பூர்வமான கருத்துக்களை உருவாக்க வேண்டும்” என்று பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சங்கக் கூட்டத்தில் உரையாற்றும் போது வலியுறுத்தினார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு சென்னை, ராஜா அண்ணா மலை புரம், செட்டிநாடு வித்தியாஸ்ரமம், குமார ராஜா முத்தையா அரங்கத்தில் நேற்று (21.12.2024) நடைபெற்ற பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சங்க கூட்டத்தில் பங்கு பெற்று செய்தி மடலினை வெளியிட்டார்.

விழாவில் பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, தலைமைப் பொறியாளர்கள், பொறியாளர்கள் மற்றும் அனைத்து பொறியாளர்களை வரவேற்று சிறப்புரையாற்றினார்.

இவ்விழாவில் அமைச்சர் எ.வ.வேலு பேசும் போது 1857ல் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட துறை இப்பொதுப்பணித் துறை. சர் ஆர்தர் காட்டன் (Sir Arthur Cotton) முதல் தலைமைப் பொறியாளர் என தெரிவித்தார்.

பொதுப்பணித்துறை பொறியாளர்கள் சங்கம் சமீபத்தில் உருவாக்கப்பட்டது. சங்க உறுப்பினர்கள் சிறப்பாக செயல்பட சில ஆலோசனைகள் வழங்கினார்கள்.

**ஒருமித்த மனப்பான்மை வளர வேண்டும்!**

பொறியாளர்களிடையே ஒருமித்த மனப்பான்மை வளர்த்தல் பொறியாளர்களின் சேவை மனப்பான்மையை ஊக்குவித்து பாதுகாத்து புதிய உதவிப் பொறியாளர்களிடத்தில் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி அதன்மூலம் அவர்களின் மனவலிமையை ஊக்குவிக்க வேண்டும்.

பொறியாளர்களின் அறிவினை மேம்படுத்த (Update) தொழில்நுட்ப கையேடுகள் (Technical Publication) மற்றும் மாதாந்திர இதழ் வெளியிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

பொறியாளர்களின் திறனை வளப்படுத்த தொழில்நுட்ப விரிவுரைகள் (Technical Lectures), கருத்தரங்குகள் (Seminars), மாநாடு (Conference) ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் மனித உறவுகளை வலுப்படுத்த தேவையான கலாச்சார நடவடிக்கைகள் (Cultural Activities), சுற்றுலா (Tour) ஆகியவற்றை ஏற்பாடு செய்தல், துறையினை மென்மேலும் வலுப்படுத்தி வளர்ச்சி அடைய தேவையான ஆக்கப்பூர்வமான கருத்துருக்களை (Proposal) எடுத்து வைக்க வேண்டும்.

**விருதுகள் கிடைக்க உழைக்க வேண்டும்!**

ஆட்சி நிர்வாகம், சமுதாயத்தில் பொறியாளர்களுக்கு அவரவர் தகுதி, நிலைக்கேற்ப உரிய அந்தஸ்து கிடைக்க வழிவகை செய்தல். துறை மற்றும் சமுதாயத்தில் பொறியாளர்களின் தனித்துவமான, சிறப்பான சேவையினை பாராட்டும் விதம் உரிய விருதுகள் கிடைக்க உழைக்க வேண்டும்.

துறை மற்றும் பொறியாளர்களின் நலன் கருதி எடுக்க வேண்டிய முக்கியமான முடிவுகளை ஆண்டுக்கொருமுறை பொதுக்குழுக் கூட்டம் (General Body), ஆறு மாதங்களுக்கு ஒரு முறை செயற்குழுக் கூட்டம், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை மைய செயற்குழு கூட்டம் நடத்தி உறுப்பினர்களின் விருப்பம் கேட்டறிந்து அதை நிறைவேற்ற வேண்டும் என அறிவுறுத்தினார்.

தனிமரம் தோப்பு ஆகாது என்பது ஒரு பழமொழி என்பதை குறிப்பிட்ட அமைச்சர் அவர்கள், சங்கம் என்பது தனித்தனி மனிதர்களின் குரலை ஒருங்கிணைக்கக் கூடிய பணியை செவ்வனே செய்து வருகிறது. ஐந்து விரலும் ஒன்று சேரும் போது தான் ஓசை எழும், அதைப் போல தான் அனைவரும் ஒன்று சேரும் போதுதான் ஓசை எழும், அவர்களுடைய கோரிக்கைகள் வலுப்பெறும். எனவே அனைவரும் ஒற்றுமையாக இருந்து சங்கத்தினை வழிநடத்த வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் முதன்மை தலைமைப் பொறியாளர் கே.பி. சத்திய மூர்த்தி, மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள், செயற் பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மற்றும் இதர அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; “மசூதி – கோயில் விவகாரங்களைக் கிளப்புவது ஏற்புடையதல்ல” என்று ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் தலைவர் மோகன் பகவத் கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் :** **ஆமாமய்யா; அவர் அப்படிச் சொல்லி இருப்பது, ‘பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவதற்குச் சமம்’ என்பதுதான் ஆர்.எஸ்.எஸ். போக்கைத் தொடர்ந்து கவனித்து வருபவர்களின் கருத்து !**